**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 37/2021 <br> Sessions : <br> Deposition of Witness for : LW7/PW-6 <br> Name :, மருத்துவர் மனோகரன் <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :54 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 29.01.2025.**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.07.2019 ம் தேதி நான் தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக கூறிக்கொண்டு லதா என்கிற 40 வயது மதிக்கதக்க ஒரு பெண் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து பரிந்துரை செய்யப்பட்டு 07.07.2019 அன்று அதிகாலை சுமார் 3

மணியளவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவர் எங்களுடைய சிறப்பு அறுவை சிகிச்சை பிரிவிற்கு 12.07.2019 அன்று மாற்றம் செய்யப்பட்டார். தேவையான பரிசோதனைகளுக்கு பிறகு 23.07.2019 அன்று அவரது கீழ் உதட்டில் ஏற்பட்டிருந்த காயத்திற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை பின் கவனிப்பிற்கு பிறகு 31.07.2019 ம் தேதி அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என நான் கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கியுள்ளேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என என்ன காரணத்தால் காயச்சான்றில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். உதட்டில் இருந்த காயத்திற்கு அறுவை சிகிச்சை அளித்ததாக சொல்லியுள்ளேன். கீழ் உதட்டில் 5 செ.மீ. அளவுக்கு தசையில் சேதம் ஏற்பட்டிருந்தது. மேற்படி விவரத்தை காயச்சான்றில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் காயச்சான்றில் கருத்துரை மட்டும் வழங்கப்பட்டுள்ளது. காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் படம் மற்றும் சி.டி ஸ்கேன் எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. போலிசாரிடம் நுண்கதிர் படம் மற்றும் சி.டி ஸ்கேன் கொடுத்தேனா என்றால் அவற்றை கொடுக்க மாட்டோம். மேற்படி நுண்கதிர் படம் மற்றும் சி.டி ஸ்கேன் அடிப்படையில்தான் நான் கருத்துரை வழங்கினேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.01.29 18:19:09 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**